பக்கங்கள் 18 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 20 ஞாயிற்றுக்கிழமை 02.06.2024 அதிர்வு 307


## அனைத்துப் பாடசாலைகளுக்கும் நாளை விடுமுறை!

இலங்கையில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் நாளை திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம் ஏற்பட் டுள்ளது என்றும், சில இடங்களில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் நிலவுகின்றது என்றும் நீர்ப்பாசனத் திணைக் களம் 04



# சீரற்ற காலநிலையால் 9 பேர் பரிதாப மரணம்!

### கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம்

இலங்கையில் கடந்த 24 மணித் தியாலங்களில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள்ளனர்.


அதற்கமைய, இரத்தினபுரி - எலபாத்த பகுதியில் வெள்ளத்தில் மூழ்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார். 04

## வெள்ளத்தில் மூழ்கி இரண்டு பேர் மாயம்

காலி, தவலம பிரதேசத்தில் இன்று வெள்ளத்தில் மூழ்கி இருவர் காணாமல்போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

காணாமல்போயுள்ள இருவரும் ஆண்கள் எனத் 04





## குருக்கள்மடம் விபத்தில் இளைஞர் ஒருவர் சாவு!

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் உள்ள குருக்கள்மடத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றுமோர் இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலை 04

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ரணில் - மஹிந்த புதனன்று பேச்சு



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அரசிடமிருந்து இந்த வாரம் முக்கிய அறிவிப்பு வெளியிடப்படவுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையடல் எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சக்தி உட்பட ஏனைய எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைவார்கள் என்று கூறப்படுவதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன முதலில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்திய பேச்சுகள் மிக நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றன. அந்தப் பேச்சுகள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 17ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான கட்சியின் நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளார்.

இதற்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவதை உறுதியாக அறிவிக்க வேண்டும் என்பது பொதுஜன பெரமுன உட்பட அவருக்கு ஆதரவு வழங்கும் தரப்புகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியில் அரசுக்கு ஆதரவு வழங்கும் தரப்பினரை ஒன்றிணைத்து அரசில் இணையுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

மறுபுறம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் தீர்மானத்தை எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை அறிவிக்க உத்தேசித்துள்ளதாக மஹிந்த ராஜபகஷ ஜனாதிபதிக்குத் தகவல் அனுப்பியுள்ளார். இந்தநிலையில் வரும் புதன்கிழமை ஜனாதிபதிக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

மறுபுறம் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியினர் 8ஆம் திகதி அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளனர். இந்தக் கூட்டத்தை அமைச்சர் மஹிந்த அமரவீர ஏற்பாடு செய்கின்றார். அத்துடன் அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஏற்பாட்டில் மாத்தறையில் எதிர்வரும் 16ஆம் திகதி கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சந்நிதி - கதிர்காம பாதயாத்திரை குழுவுக்கு சீனக்குடாவில் வரவேற்பு

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி – கதிர்காம ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினருக்கு திருகோணமலை சீனக்குடாவில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் சார்பாக அங்கு சென்ற காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் சமூக சேவையாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் வரவேற்பளித்தனர்.

கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த இந்தப் பாதயாத்திரை இன்று (02) 22 ஆவது தினத்தை எட்டியுள்ளது.

மொத்தமாக 89 அடியார்கள் இந்தப் பாதயாத்திரை குழுவில் இடம் பெற்றுள்ளனர்.



# தெல்லிப்பளை மகாஜனாவில் திருவுருவப்படம் திறந்துவைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் ஒய்வுநிலை அதிபர் அமரர் க.நாகராசாவின் திருவுருவப்படம் அன்னாரது நினைவு மண்டபத்தில் அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.






# வடமராட்சியில் கிருமித் தொற்றால் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழப்பு!

கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – வடமராட்சி, புலோலி வட மேற்கைச் சேர்ந்த 57 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குடும்பப் பெண்ணுக்கு நேற்று சிறுநீர் அடைப்பு ஏற்பட்டு அவதியுற்று மயக்கமடைந்தார்.

இதையடுத்து, அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது ஏற்கனவே அந்தப் பெண் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவருக்கு ஈரல் பாதிப்படைந்து அதன் மூலம் கிருமித் தொற்று ஏற்பட்டு உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி



### குருக்கள்மடம்...

யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுதாவளை பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

படுகாயமடைந்த இளைஞர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கிரான்குளம் பகுதியில் இருந்து இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றில் களுதாவளை நோக்கிச் சென்றுள்ளனர். மிகவும் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியின் குருக்கள்மடம் வளைவுப் பகுதியில் இருந்த மின்கம்பத்தில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைக் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### சீரற்ற...

இரத்தினபுரி அயகம பகுதியில் தும்பர பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேபோன்று, இரத்தினபுரி கிரியெல்ல பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளர் என்றும் மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவிசாவளை – புவக்பிட்டிய எலிஸ்டன் தோட்டப்பகுதியில் வெள்ளத்தில் மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

78 வயதான தந்தை, 36 வயதான மகள் மற்றும் 7 வயதான பேத்தி ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வீடு வெள்ளத்தில் மூழ்கிய காரணத்தினாலேயே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளன.

இதனிடையே, அவிசாவளை ஹேவாயின்ன பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 11வயதான சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மாத்தறை – தெய்யந்தர பல்லேவெல பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

20 மற்றும் 27 வயதுடைய இருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் காயமடைந்த மற்றுமொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### 10 மாவட்டங்...

விடுக்கப் பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவுக்கும், களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, காலி, கேகாலை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 41 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணி முதல் நாளை திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை அமுலில் இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

### அனைத்துப்...

தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாகப் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


### வெள்ளத்தில்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போனவர்களைத் தேடும் விசேடநடவடிக்கைஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# நாளை அதிகாலை நெடுவரிசையில் ஆறு கோள்கள்

## வடக்கு மக்களும் இதைப் பார்த்து இரசிக்க முடியுமா?




வானில் ஒரே நேர்கோட்டில் 6 கோள்கள் வரும் அரிய நிகழ்வு, நாளை 3 ஆம் திகதி அதிகாலை நிகழ்கிறது என்று ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன.

ஆனால் உண்மையில் 6 கோள்களையும் வெற்றுக் கண்களால் பார்க்க முடியுமா? இல்லை என்பது தான் சாத்தியமான பதிலாகும்.

நாளை அதிகாலை பூமியிலிருந்து ஆறு கோள்களின் நெடுவரிசைத் தோற்றத்தைக் காண்பது என்பது சாத்தியமற்றது.

6 கோள்கள் ஒரே நேர்கோட்டில் இருப்பதாகத் தோற்றும் ஒரு அழகிய நிகழ்வையே கிரக அணிவகுப்பு (Planet Parade) என்றும் வர்ணிக்கப்படுகிறது.




பொதுவாகவே யுரேனஸ் மற்றும் நெப்டியூனை வெற்றுக்கண்களால் காண்பது அரிது. மேலும் அதிகாலையில் சூரியனின் வைகறை மெல்லொளி பிரகாசம் காரணமாகவும் புதன், வியாழன், யுரேனஸ் மற்றும் நெப்டியூனை வெற்றுக் கண்களால் பார்க்க முடியாத அளவுக்கு மங்கலாக இருக்கும்.

சந்திரன், செவ்வாய், சனி ஆகியவற்றை மட்டுமே வெற்றுக் கண்ணால் பார்க்க கூடியதாக அமையும். எனவே யுரேனஸ் நெப்டியூனைப் பார்க்க இருவிழி நோக்கி (Binoculars) அல்லது தொலை நோக்கிகள் (Telescope) தேவைப்படும்.

எனவே விடியலுக்கு முன் இவைகள் ஒன்றன்பின் ஒன்றாக உதயமாவதை வெற்றுக் கண்களால் பார்க்க முடியும் என்பது சாத்தியமற்றது. செவ்வாய், சனி வெற்றுக் கண்ணுக்கு மங்கலாக தெரியும். பார்க்க கூடியதாக அமையும். சனி, கும்பத்தில் இரவு நேரத்திலிருந்தே தெரியும் மற்றும் மேடத்தில் சிவப்பு செவ்வாய் தெரியும்.





நாளை 03 ஆம் திகதி சனிக் கோளுக்கு கீழேயும், 4ஆம் திகதி செவ்வாய் கோளுக்கு கீழேயும் பிறைச் சந்திரனையும் காணலாம். நாளை 3 ஆம் திகதி சூரிய உதயத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னர் அடிவானம் மறைக்கப்படாத வெளியான பிரதேசங்கள், கடற்கரை போன்ற பகுதிகளிலிருந்து இதனை பார்க்க முடியும்.

இருப்பினும் ஒளி மாசு குறைந்த தெளிவான வானமுடைய இடங்களிலிருந்து இதனை அவதானித்தால் சில கோள்களைப் பார்க்க முடியும். தொலைநோக்கி பயன்படுத்தி பார்வையிட்டால் அனைத்தையும் பார்வையிட முடியும்.

வடமாகாணத்தில் இருப்பவர்களுக்குத் தற்போதைய பருவகால நிலை காரணமாக மேகக் கூட்டம் அதிகமாக உள்ளதால் இவற்றை அவதானிப்பது இயலாததாக அமையலாம்.

எனவே ஊடகங்களில் அதிசய நிகழ்வாக சித்தரிக்கப்படும் ஒரே நேர்கோட்டில் 6 கோள்கள் வரும் அதிசய நிகழ்வு என்பதை ஒரே பார்வையில் வெற்றுக் கண்களால் பார்க்க முடியும் என்று எதிர்பார்க்கும் மக்கள், மிகவும் ஏமாற்றமடைவார்கள். எனினும் ஆறு கோள்களில் சிலவற்றை இருவிழிநோக்கி அல்லது தொலைநோக்கி உதவியின்றி வெற்றுக் கண்களால் பார்க்கமுடியும்.




ஆ.இளங்கோ
(ஓய்வு பெற்ற வலயக்கல்விப்பணிப்பாளர்.
அளவெட்டி)

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அதிகாரிகளின் சிக்கல்

ஆட்சி மாற்றத்திற்கான சந்தர்ப்பங்கள் - வாய்ப்புகள் - இருக்கும் சமயங்களில், அவை நெருங்கும் போது, ஆட்சியாளர்களின் - குறிப்பாக அரசியல்வாதிகளின் - உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு அதிகாரிகள் பின்னிற்பார்கள். அது வழமையானதுதான்.

தேர்தல்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு உதவப்போய், தேர்தல்களின் பின்னர் பொறுப்புத் தங்கள் தலையில் விழுந்து விடும் என்ற பயம் - அச்சம் - இதற்குக் காரணம்.

இத்தகைய விடயங்களில் முன்னைய அரசு அதிகாரிகளுக்கு நேர்ந்தவை பற்றிய அனுபவ பாடங்கள் தாராளம் என்பதால் அத்தகைய காரியங்களில் இறங்குவதற்கு எப்போதுமே அரசு அதிகாரிகள் பின்னடிப்பார்கள் என்பதும் புரிந்து கொள்ளத்தக்கதே.

இப்போதும் ஜனாதிபதி தேர்தல் வருகின்றது. இன்னும் மூன்றரை முதல் நான்கரை மாதங்களுக்குள் ஆட்சி மாற்றம் வருவதற்கான சாத்தியங்கள் தாராளமாக உள்ளன.

இந்தச் சமயம் பார்த்து, வழமைக்கு மாறாக, திடுதிப்பென நிதியை ஒதுக்கி, அவசர வேலைத் திட்டம் ‘சுடுகுது மடியைப் பிடி!’ என்ற மாதிரி காரியத்தை ஆற்றும்படி அரச மேலிடத்தினால் அதிகாரிகள் பணிக்கப்படுகிறார்கள். அவற்றைச் செய்யப் பின்னடிக்கும் அரசு அதிகாரிகள் மீது அரசியல் தலைமைத்துவத்தின் பாய்ச்சல் - கெடுபிடி - தீவிரமாக உள்ளது என்றும் கூறப்படுகிறது.

அறிவிக்கப்பட்டு, வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு, ஒரு தொகுதி வாக்குச் சீட்டுக்களும் அச்சிடப்பட்டு விட்ட உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஆயிரம் கோடி ரூபா வழங்க முடியாது என்று கூறித் தேர்தலையே தடுத்து விட்ட ரணிலின் அரசு, இப்போது உள்ளூராட்சி மன்றங்கள் ரீதியாக அவசர அபிவிருத்திப் பணிகள் என்று ஆயிரத்து இருநூறு கோடி ரூபா நிதியை ஒதுக்கி, அடுத்த இரண்டு மாதங்களுக்குள் - அதாவது ஜனாதிபதி தேர்தலுக்கு முன் - அவற்றை நடத்தி முடிக்கும்படி அதிகாரிகளுக்கு கிடுக்குப் பிடி போட்டு நெட்டித் தள்ளுகின்றது.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் ஒதுக்கப்படும் நிதியை ஒட்டி, திட்டங்களை அடையாளம் கண்டு, கண்காணித்து, முன்னெடுக்க உள்ளூர்ப் பிரமுகர்களைக் கொண்ட குழுவை நியமிக்கும்படியும் உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

இந்த உள்ளூர்ப் பிரமுகர்கள் குழு என்பது ஆளுந்தரப்பு அரசியல் பிரமுகர் பட்டியல் என்றும், அதாவது அரசு நிதியை உள்ளூரிலுள்ள அரசுப் பிரமுகர்களின் எண்ணப்படி - திட்டப்படி - திருப்திபடி - செலவிடுவதற்கு இணங்கி போகுமாறு அரசு அதிகாரிகள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் திட்டம் தேர்தல் விதிமுறைகளுக்கு மாறானது எனத் தேர்தல் ஆணையம் எழுத்து மூலம் ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்த பின்னரும், அதனை முன்னெடுக்கும்படி அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

இந்த விசேட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் இரண்டு மாதங்களுக்குள் நிறைவேற்றுமாறு அனைத்து அமைச்சுக்கள் மற்றும் மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற நிர்வாகிகளுக்கு அரசுத் தலைமை உத்தரவிட்டுள்ளது.

சில அதிகாரிகள் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஆதரவளிக்கத் தவறியுள்ளனர் என வெளியான தகவலைத் தொடர்ந்து நிதி அமைச்சகத்தால் இந்த உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, பணிகளைச் செய்யத் தவறிய அதிகாரிகளைக் கண்டறிந்து, அவர்களுக்குப் பதிலாக வேறொரு அதிகாரியை நியமித்து, திட்டத்தைச் செயல்படுத்த அந்தந்த நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பணிகளைச் செய்யத் தவறியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வரவிருக்கும் தேர்தல்களைக் கருத்தில் கொண்டு, திட்டங்களைச் செயல்படுத்துவதில் தாங்கள் ஈடுபடவில்லை என்று அதிகாரிகள் சிலர் வெளிப்படையாகவே சுட்டிக்காட்டிக் காட்டினர் என்றும் கூறப்பட்டது.

அரசுத் தலைவர்களின் அரசியல் நோக்கம் கொண்ட இத்தகைய பித்தலாட்டங்களில் இடைநடுவில் சிக்கி அல்லாட போகின்றவர்கள் அரசு அதிகாரிகள்தான். பாவம் அவர்கள்.




# பசு வதைக்கு எதிராகப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

பசு வதைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பசு வதைத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரியும் அராலி பகுதியில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் இரண்டு பசுக்களைக் கொலை செய்யும் கொலைக் களங்கள் முற்றுகையிட்டு சீல் வைக்கப்பட்டன. இந்நிலையில், இவ்வாறான சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "இலங்கை சிவபூமி, பசுக்களும் எமது தெய்வங்களே, வெட்டாதே வெட்டாதே கன்றுடன் பசுவை வெட்டாதே, கன்றுத் தாச்சி பசுக்களை வெட்டுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும், பசு வதைத் தடைச் சட்டத்தை அமுல்படுத்து, காசாவுக்கு ஒரு நீதி இந்துக்களுக்கு ஒரு நீதியா?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பசுக்களும் போராட்டத்தில் கலந்திருந்தன.

உருத்திரசேனையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் மறவன்புலவு சச்சிதானந்தம், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா, மாணவர்கள், இளைஞர் - யுவதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.














# குசான்வில் பிரெஞ்சு தமிழ் சங்கத்தின் வெள்ளிவிழா




குசான்வில் பிரெஞ்சு தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா கடந்த மாதம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

மங்கல விளக்கை முதன்மை விருந்தினர் குசான்வில் நகர பிதா அப்டெல்அசிஸ் அமிதா, துணை நகர பிதா திருவாட்டி கிறிஸ்டியன் பாய்ஸ் செவோஷ்சே, சிறப்பு விருந்தினர்களாகிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பிரதிநிதி பாலசுந்தரம், தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகப் பொறுப்பாளர் நாகஜோதீஸ்வரன், சங்கங்களின் கூட்டமைப்பு பிரதிநிதி நிதிபன், குசான்வில் சங்கத் தலைவர் காணிக்கைநாதன், குசான்வில் சங்கத்தின் செயலாளர் காந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.




தொடர்ந்து அகவணக்கமும் பின்னர் குசான்வில் தமிழ்ச் சோலை மாணவர்களின் தமிழ்ச் சோலை கீதமும் இசையுடன் பாடப்பட்டது.

வரவேற்பு நடனமும் பரத நடனங்களும் எழுச்சி நடனமும் இடம்பெற்றன. மேலும் குழுப்பாடல்கள், கவிதைகள், குழுப் பேச்சுக்கள், இசைக்கச்சேரி ஆகியவற்றுடன் ஆசிரியர் மதிப்பளிப்பு, முதன்மை விருந்தினர் உரை, சான்றிதழ் வழங்குதல், சிறப்பு விருந்தினர் உரை, வெள்ளிவிழா மலர் வெளியீடு ஆகியவை இடம்பெற்றன.







EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# திருகோணமலை மொறாவெவ பிரதேச அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிப்பு!





(பழுவூரான்)

திருகோணமலை மொறாவெவ பிரதேச செயலகப் பிரிவில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்ட நிதியில் ஒதுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கான ஆரம்ப நிகழ்வு மொறா வெவ பிரதேச செயலாளர் ஏ.நவேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலமாக முதற் கட்டமாக ஆரம்பிக்கப் படவுள்ள 10 வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கபில நுவான் அத்துக்கொறள கலந்து கொண்டார்.

அத்தோடு இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக மொறவெவ பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஜகத் கலந்து கொண்டார்.

மொறாவெவ பிரதேச செயலக பிரிவில் 41 வேலைத் திட்டங்கள் 15.8 மில்லியன் வரவு - செலவு திட்ட நிதியின் ஊடாக மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், பாதைகள், விகாரைகள் மற்றும் பொது இடங்கள் என பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வுகள் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் கபில நுவான் அத்துக்கொறளவின் பங்கேற்புடன் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கங்குவேலி புளியடிச்சோலை இந்து மயானத்தில் சிரமதானம்

(எம்.எம்.நௌபீக்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கங்குவேலி சிவில் பாதுகாப்பு குழு, கங்குவேலி மரண நலன்புரி சங்கம், புளியடிச்சோலை மரண நலன்புரி சங்கம் ஆகியன இணைந்து கங்குவேலி புளியடிச்சோலை இந்து மயானத்தில் சிரமதானம் பணிகளை நேற்று (01) மேற்கொண்டனர்.

இந்தச் சிரமதானத்தில் பொதுமக்கள் கலந்து கொண்டு இந்து மயானத்தைச் சிரமதானம் மூலம் துப்புரவு துப்புரவு செய்தனர்.





# சுய கல்வி கற்கும் தன்மையை இழந்து அடைவை எட்ட முடியாது மாணவர்கள்!

## மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் சந்தியோகு

(மன்னார்)

தற்போதைய மாணவ சமூகம் தனியார் கல்வி நிலையங்களுக்கும், தனிப்பட்ட கல்விக்கும் என்று அங்கும் இங்கும் ஓடி திரிவதில் அக்கரை செலுத்துகின்றனர். இதனால் அவர்கள் சுய கல்வி கற்கும் தன்மையை இழந்து வருகின்றனர். இதன் காரணமாக, அவர்கள் தமது அடைவு மட்டத்தை அடைய முடியாத நிலையில் உள்ளனர்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் அருட் சகோதரர் சந்தியோகு இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது வெளியாகியுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக தனது பாடசாலை நிலைப்பாடு குறித்து நேற்று சனிக்கிழமை (01) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் விஞ்ஞானத் துறை, கணிதத் துறை, வணிகத்துறை, கலைத்துறை மற்றும் தொழில்நுட்பத் துறை போன்ற துறைகள் காணப்படுகின்றன.

தற்போது வெளியாகி உள்ள 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் எமது கல்லூரியானது மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று எமது கல்லூரிக்கும் மாவட்டத்துக்கும் மாகாணத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தந்துள்ளனர்.



கணிதத் துறையைப் பொறுத்த மட்டில் எமது கல்லூரி மாணவன் பிரேந்திர



பிரேந்திரகுமார் வானுஜன்



நெதானியேல் திர்ஸானன்

குமார் வானுஜன்(3 ஏ) சித்தியை பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் நிலையையும், உயிரியல் விஞ்ஞான பிரிவு மாணவன் நெதானியேல் திர்ஸானன் (3 ஏ) சித்தியை பெற்று மாவட்ட மட்டத்தில் 2 ஆம் நிலையையும் பெற்றுள்ளனர்.

இவ்வாறு அனைத்து துறைகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் சுமார் 30 பேர்வரை சகல துறைகளிலும் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்குக் காரணமாக ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அனைவரும் காரணமாக உள்ளனர். அனைவருக்கும் நன்றிகள்.

அதிகூடிய சித்திகளைப் பெற்றுப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை மட்டும் நம்பி ஆசிரியர்களின் வழி காட்டுதல்களுக்கு அமைவாக செயல் பட்டவர்கள்.

எனவே இனி வரும் மாணவச் சமுதாயம் பாடசாலைக் கல்வியை நம்புங்கள்.பாடசாலையில் உங்களுக்குக் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்களை நம்புங்கள்.

அங்கும் இங்கும் ஓடித் திரிந்து நேரத்தை வீண் விரயம் செய்யாது வீட்டில் இருந்து கடுமையாக கல்வி கற்கும் பட்சத்தில் நிச்சயம் உங்களால் வெற்றி அடைய முடியும்.பல்கலைக்கழகம் செல்ல முடியும்.- என்றார்.

# வலிந்துதவு சமூக சேவை அமைப்புகளை வலுப்படுத்தலும் பிரதேச மட்ட ஒன்றியம்!






(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட வலிந்துதவு சமூக சேவை அமைப்புக்களை வலுப்படுத்தி சம்மாந்துறை பிரதேசத்தின் சமூக அபிவிருத்தியை இலக்காக கொண்டு செயற்படும் நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்ட அமைப்பின் பிரதிநிதிகளுடனான இரண்டாவது மீளாய்வுக் கூட்டமானது உதவி பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம் நெறிப்படுத்தலின் கீழ் சமூக சேவை உத்தியோகத்தர் அ.அகமட் சபீர் தலைமையில் நேற்று (01) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தப் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேசத்தில் இயங்கி வரும் 108 வலிந்துதவு சமூக சேவைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இவர்கள் தங்களுடைய வேலைத்திட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடினர். பிரதேச மட்ட வலிந்துதவு சமூக சேவைகள் அமைப்புக்களின் ஒன்றியம் ஒன்றும் அமைக்கப்பட்டது.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555




# மண்முனை வடக்கு பிரதேச செயலக புகைத்தல் எதிர்ப்பு தின விழிப்புணர்வு!

(பழுவூரான்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தால் பிரதேச செயலாளர் வ.வாசுதேவனின் தலைமையில் "புகையிலை உற்பத்தி நிறுவனத்தின் தலையீட்டிலிருந்து நமது பிள்ளைகளையும் இளைஞர்களையும் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளின் கீழ் புகைத்தல் எதிர்ப்பு தின விழிப்புணர்வு பேரணி வெள்ளிக்கிழமை (31) நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வுக்குச் சமுர்த்தித் திணைக்களம், தொழில் சார் உளவியல் உள வளத்துணை நிலையம் மற்றும் திருப்பெருந்துறை லிட்டில் ஸ்டார் சிறுவர் கழகம் என்பன அனுசரணை வழங்கியிருந்தன.

இந்த விழிப்புணர்வுப் பேரணி பிரதேச செயலகத்தில் இருந்து மத்திய வீதியூடாக காந்திப் பூங்காவை அடைந்தது.

இதன்போது காந்திப் பூங்காவில் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் விரிவுரையாளர் க.மோகனதாஸின் நெறியாள்கையில் ஆடல் நிலம் வழங்கும் "விரல் இடுக்கில் கசியும் உயிர்" எனும் வீதி நாடகம் அளிக்கை செய்யப்பட்டது.



இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் சார் உளவியல் உள வளத்துணை நிலையம், மாவட்ட திட்ட உத்தியோகத்தர் மற்றும் அந்த நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், திருப்பெருந்துறை லிட்டில் ஸ்டார் சிறுவர் கழக உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வைப் பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ் சிறுவர் பெண்கள் பிரிவு , சமூக சேவை கிளை மற்றும் கலாசாரப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஒழுங்குபடுத்தி இருந்தனர்.

இதன்போது அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்களுக்கும், லிட்டில் ஸ்டார் சிறுவர் கழக உறுப்பினர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.












# ஸாஹிறா கல்லூரி மாணவனை வாழ்த்தினார் றிஸ்லி முஸ்தபா!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் முதலிடம் பெற்று மருத்துவத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரி மாணவன் ஹிசான் அஹமட், கல்வி உதவி சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் தலைவர் றிஸ்லி முஸ்தபாவால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாட் பதியுதீன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பின் தலைவரும், றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி சமூக மேம்பாட்டு அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஐ.எம்.ஏ.மனாப், கட்சியின் உயர்பீட உறுப்பினர் எம்.எம். ஜுனைதீன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது இந்த மாணவனுக்குக் கையடக்க 'டேப்' ஒன்றும் வழங்கப்பட்டது.

# யாழ். முதல்நிலை மாணவி வஜினாவுக்கு நேரில் சென்று வாழ்த்துக் கூறிய ஈ.பி.டி.பி.





யாழ்ப்பாணத்தில் மாவட்ட நிலையில் முதலாம் இடம்பெற்ற வஜினாவுக்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தனர் ஈ.பி.டி.பி. கட்சியின் முக்கியஸ்தர்கள்.

உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் யாழ். மாவட்டத்தில் முதல் நிலை பெற்ற வஜினாவுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட முக்கியஸ்தர்கள் நேரில் சென்று பாராட்டி வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

வெளிவந்த 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் வஜினா பாலகிருஷ்ணன் யாழ். மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும், நாடளாவிய ரீதியில் 32 இடத்தையும் பெற்றிருந்தார்.

பண்டத்தரிப்பு சாந்தை மண்ணுக்குப் பெருமை சேர்த்த பாலகிருஷ்ணன் வஜினாவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக செயலாளர் சிவகுரு பாலகிருஸ்ணன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் கந்தசாமி கமலேந்திரன், வலிகாமம் தென்மேற்கு பிரதேச நிர்வாக செயலாளர் வெலிச்சோர் அன்ரன்டன்ஜோன்சன், கட்சியின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச உதவி நிர்வாக செயலாளர் குலம் ஆகியோர் நேரில் சென்று பாராட்டி வாழ்த்தினர்.

# மௌலவி ஆசிரியர்களுக்கு புத்தளத்தில் கருத்தரங்கு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தள மாவட்டத்தின் மௌலவி ஆசிரியர்களின் ஆளுமையை விருத்தி செய்வதற்கான கருத்தரங்கு எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி சபை கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது.

புத்தளம் மாவட்ட மௌலவி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் அரபு மொழி மற்றும் அரபு இலக்கிய தகமைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர், புத்தளம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோருக்கு கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பீ.ஆர்.காரியவசம் அறிவுறுத்தியுள்ளார்.



# மட்டக்களப்பு, வெள்ளிமலை சித்தி விநாயகர் திருவிழா!



(ஆர்.திலக்ஸ்)

மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பிர தேச செயலகத்துக்கு உட்பட்ட இளைஞர் விவசாயத் திட்ட வெள்ளிமலை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ திருவிழாவின் கொடி யேற்ற நிகழ்வு நேற்று (01) இடம்பெற்றது.

இந்த ஆலயமானது போராட்ட காலங்களில் பாதிக்கப்பட்டு கடந்த வருடம் கும்பாபிசேகம் இடம்பெற்று, இந்த வருடம் முதலாவது மஹோற்சவம் இடம்பெறுகின்றது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறை வடையும்.

அனைத்து கிரியைகளும் சிவஸ்ரீ சு.கு.விநாயகமூர்த்தி குருக்கள் தலைமையில் இடம்பெறுகின்றது.

# துறைநீலாவணை முத்துமாரியம்மன் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வு

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டக்களப்பு துறை நீலாவணை முத்துமாரியம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 05 ஆம் திகதி புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

இந்தக் கும்பாபிஷேக நிகழ்வின் கர்மாரம்பம் நாளை 03 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

பால்காப்பு நிகழ்வானது 04ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற வுள்ளது.

அதனைத்தொடர்ந்து 10 நாள்கள் மண்டலாபிஷேகப் பூசையைத் தொடர்ந்து அம்மனுடைய திருக்கதவு 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை திறக்கப்பட்டு உட்சவம் 7 தினங்கள் இடம்பெறும்.

இதில் தீமிதிப்பு வைபவம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பூஜைகள் சிவசிறி கு.நல்லராஜா குருக்களின் தலைமையில் இடம்பெறவுள்ளன. உற்சவத்துக்கான ஒழுங்குகளை ஆலயத் தலைவர் க.அழகரெத்தினம், செயலாளர் எஸ். குகதாசன், பொருளாளர் எஸ்.ரமேஸ் உட்பட நிர்வாக சபையினர் மேற் கொண்டு வருகின்றனர்.



# மட்டக்களப்பு மாநகர சபையின் சுகாதார ஊழியர்களுக்கான இலவச மருத்துவம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் ந.சிவலிங்கத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் மருத்துவ முகாம் ஒன்று இன்று சனிக்கிழமை (01) மட்டக்களப்பு மாநகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த முகாமை மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் இணைந்து நடத்தியிருந்தனர்.



இந்த வைத்திய முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம், தொற்றா நோய்கள் போன்றவற்றுக்கான பரிசோதனைகள் இடம்பெற்றன. அத்துடன் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் த.டமராஜ், சுகாதாரப் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் டி. ரூபாகரன் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர்.






# உள்ளூராட்சி மன்ற வள ஒதுக்கீட்டை கண்காணித்தல் தொடர்பில் பயிற்சி!

(த.சுபேசன்)

உள்ளூராட்சி மன்றங்களின் வள ஒதுக்கீட்டைக் கண்காணித்தல் மற்றும் முறையான வள ஒதுக்கீட்டுக்குப் பங்களிப்புச் செய்தல் எனும் தலைப்பில், மூன்று நாள் வதிவிட திறன்விருத்திப் பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணம், புங்கன்குளத்தில் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியில், இலங்கையின் வடக்கு மாகாணத்தில், கிறிசலிஸ் நிறுவனம் நடைமுறைப்படுத்தும் 'பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்கள் ஊடாக அமைதி மற்றும் உள்ளடங்கலான தாங்குதிறன் மிக்க சமூகங்களை மேம்படுத்தல்' எனும் கருத்திட்டத்தின் ஓர் அம்சமாக இது முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியில் பாதீடு தயாரித்தலின் போது, முறையான வள ஒதுக்கீடு, பால் நிலை சமத்துவம் உள்ளடங்கலான வளப் பங்கீடு, வள ஒதுக்கீட்டை கண்காணித்தல், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள், வரையறை, சேவைகள் மற்றும் தொழிற்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதில் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனித உரிமை பாதுகாவலர், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 பேர் பங்குபற்றினர்.

# பா.ஜ.க. கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கும்; தேர்தலுக்கு பின்னரான கருத்து கணிப்பு முடிவு



**மக்களவை தேர்தல் 2024**
**மொத்த தொகுதிகள்: 543**

| ஊடகம் | பாஜக+ | இண்டியா+ | பிற கட்சிகள் |
|---|---|---|---|
| டுடேஸ் சாணக்கியா | 381 | 108 | 29 |
| தைனிக் பாஸ்கர் | 281-350 | 145-201 | 33-49 |
| டைம்ஸ் நவ் - இடிஜி | 358 | 132 | 53 |
| ஜன் கி பாத் | 362-392 | 141-161 | 10-20 |
| ஏபிபி- சிவோட்டர் | 353-383 | 152-182 | 4-12 |
| ரிபப்ளிக் பிமார்க் | 359 | 154 | 30 |
| [illegible] | 353-368 | 118 -133 | 43-48 |
| இண்டியா-சிஎன்எக்ஸ் | 371-401 | 109-139 | 28-38 |
| என்.டி.டி.வி. | 361 | 145 | 37 |
| [illegible] | 354 - 372 | 108 - 125 | - |
| நியூஸ் எக்ஸ் | 371 | 125 | 47 |

**தமிழ்நாடு - மொத்த தொகுதிகள் 39**

| ஊடகம் | இண்டியா+ | பாஜக+ | அதிமுக+ |
|---|---|---|---|
| இண்டியா டுடே- ஆக்சிஸ் | 33-37 | 2-4 | 0-2 |
| ஏபிபி- சிவோட்டர் | 37-39 | 0-2 | 0-1 |
| நியூஸ் எக்ஸ் | 28 | 2 | 9 |
| இண்டியா டிவி-சிஎன்எக்ஸ் | 26-28 | 5-7 | 0-1 |
| டைம்ஸ் நவ் - இடிஜி | 34 | 2-3 | 2 |
| [illegible] | 34-37 | 1-3 | 0-1 |

மக்களவைத் தேர்தலில் பா,ஜ,க, தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் ஆட்சியமைக்கும் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான கருத்து கணிப்புகளில் பா.ஜ.க. கூட்டணி 350 இற்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் ஜுன் 1 ஆம் திகதி வரை 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. மக்களவையில் மொத்தமுள்ள 543 தொகுதிகளில் குஜராத்தின் சூரத் தொகுதியில் மட்டும் பா.ஜ.க. வேட்பாளர் முகேஷ் தலால் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு உள்ளார். ஏனைய 542 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது.

இறுதிக் கட்ட தேர்தல் நேற்று நிறைவடைந்ததைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்குப் பிறகு தேர்தலுக்குப் பிந்தைய கருத்து கணிப்புகள் வெளியாகின.

முன்னணி இந்தி நாளிதழான தைனிக் பாஸ்கர் வெளியிட்ட கருத்து கணிப்பில் பா.ஜ.க. கூட்டணி 281-350, இண்டியா கூட்டணி 145-201, இதர கட்சிகள் 33-49 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டு உள்ளது.

ரிபப்ளிக் டிவி–பிமார்க் இணைந்து நடத்திய கருத்துகணிப்பில் பா.ஜ.க. கூட்டணிக்கு 359, இண்டியா கூட்டணி 154, இதர கட்சிகளுக்கு 30 இடங்கள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, ரிபப்ளிக் பாரத் மேட்ரிஸ், ஜன் கி பாத், நியூஸ் நேஷன், நியூஸ் எக்ஸ் மற்றும் டி–டைனமிக்ஸ், இண்டியா டிவி–சி.என்.எக்ஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் நடத்திய கருத்து கணிப்பிலும் பா.ஜ.க. கூட்டணிக்கு 350 இற்கும் மேற்பட்ட தொகுதிகள் கிடைக்கவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், மேற்குவங்கம், பிஹார், டில்லி, சத்தீஸ்கர், அசாம், ஆந்திரா, ஒடிசா, உத்தராகண்ட், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் பா.ஜ.க. பெரும்பான்மை தொகுதிகளைக் கைப்பற்றும் என்றும் தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட தென் மாநிலங்களில் பா.ஜ.க. முதல் முறையாக கால் பதிக்கும் என்றும் கருத்து கணிப்புகளில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மத்தியில் ஆட்சியமைக்க 272 எம்.பி.க்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் பா.ஜ.க. கூட்டணி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கும், பிரதமர் நரேந்திர மோடி 3 ஆவது முறையாக பதவியேற்பார் என்று பெரும்பாலான கருத்து கணிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 39 மக்களவைத் தொகுதிகளில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி பெருவாரியான இடங்களில் அமோக வெற்றி பெறும் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.

குறைந்தபட்சம் 26 இல் இருந்து அதிகபட்சம் முழுவதுமாக 39 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெல்லக் கூடும் என கருத்து கணிப்புகளில் தெரிவிக்கப்படுகிறது. பா..ஜக. கூட்டணி அதிகபட்சமாக 7 தொகுதிகள் வரை வெல்லக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நியூஸ் எக்ஸ் நிறுவனம் அ.தி.மு.க. கூட்டணிக்கு 9 தொகுதிகள் கிடைக்கும் என தெரிவித்துள்ளது.

# 3 நாள்கள் தியானத்தின்போது பிரதமர் தூக்கமின்றி மௌன விரதம் இருந்தார்



கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் 3 நாள் தியானத்தை பிரதமர் மோடி நேற்று மதியம் நிறைவு செய்தார். கடல் நடுவே உள்ள திருவள்ளுவர் சிலையை வணங்கிய பின், படகில் கரை திரும்பினார். பின்னர் மாலையில் ஹெலிகாப்டரில் திருவனந்தபுரம் சென்று, அங்கிருந்து விமானத்தில் டில்லி சென்றார்.

இந்தியாவின் தென்முனையில் கடல் நடுவே அமைந்துள்ள கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் பிரதமர் நரேந்திர மோடி கடந்த 30ஆம் திகதி இரவு தியானத்தை தொடங்கினார். நேற்று 3 ஆவது நாளாக அவர் தியானத்தில் ஈடுபட்டார்.

இந்த 3 நாள்களும் பிரதமர் மோடி தூங்கவேயில்லை. அதுபோல், 3 நாட்களும் மௌன விரதத்தை கடைபிடித்துள்ளார். விவேகானந்தர் மண்டப ஊழியர்கள், பாதுகாவலர்களிடம் சைகையிலேயே பேசியுள்ளார்.

அத்துடன், அவர் ஏசி அறையில் தங்க மறுத்திருந்தார் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



# ரபாவிலிருந்து வெளியேறும் இஸ்ரேலியப் படைகள்

ரபாவில் கடந்த 3 வாரங்களாக தாக்குதல் நடத்திய இஸ்ரேல் தற்போது தனது படைகளை அங்கிருந்து வெளியேற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அகதிகள் முகாமில் தங்கியிருந்த பொதுமக்கள் தங்களது குடியிருப்பு பகுதிகளை சென்று பார்வையிட்டு வருகின்றனர் என சர்வதேச ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், காசாவின் ஜபாலியா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 70 பேரின் உடல்கள் அங்கு காணப்பட்டன எனவும் பல வீடுகள் இடிந்து தரை மட்டமாகி உள்ளதுடன், மேலும் பலர் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹமாஸ் படைகள் முற்றாக அழிக்கப்படும் வரை காசாவில் தமது இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், மீண்டும் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் இஸ்ரேலியப் பிரதமர் தனது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், உடனடிப் போர் நிறுத்தத்துக்கு கனடா அழைப்பு விடுப்பதாக அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் உடனடி போர் நிறுத்தம், தடையில்லா மனிதாபிமான உதவிகளை அவசரமாக அதிகரிப்பது மற்றும் பணயக்கைதிகள் அனைவரையும் விடுவிப்பதற்கு கனடா அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த துயரத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு ஒரு வாய்ப்பாகும் என்றும் இதனைக் கருத்திற் கொண்டு அமைதிக்கான பாதைக்கு திரும்ப வேண்டும் எனவும் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத குற்றச்சாட்டில் 8 பேரை தூக்கிலிட்டது ஈராக்



பயங்கரவாத குற்றச்சாட்டில் தண்டனை விதிக்கப்பட்ட எட்டு பேரை ஈராக் தூக்கிலிட்டுள்ளதாக சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி குற்றவாளிகள் நசிரியா நகரில் உள்ள அல்-ஹட் சிறையில் 'நீதி அமைச்சகக் குழுவின் மேற்பார்வையில்' தூக்கிலிடப்பட்டனர் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், 'பயங்கரவாதம்' என்று குற்றம் சாட்டப்பட்ட ஈராக்கியர்களுக்கு நீதிமன்றங்கள் சமீப ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனைகளை வழங்கியுள்ளன.

இதன்படி, ஈராக் சட்டத்தின் கீழ், பயங்கரவாதம் மற்றும் கொலைக் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும், மேலும் மரணதண்டனை ஆணைகள் ஜனாதிபதியால் கையொப்பமிடப்பட வேண்டும்.

இந்த நிலையில், 'பயங்கரவாத குற்றவாளிகள் மற்றும் இஸ்லாமிய அரசு குழுவைச் சேர்ந்தவர்கள்' என்று எட்டு பேர் தூக்கிலிடப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், மேலும் நபர்கள் 'பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ்' தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

பக்கங்கள் 04

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 02/06/2024


## கார் தடம் புரண்டு மூன்று பேர் காயம்

ஒன்ராரியோ, ஜூன் 02

டொரன்டோவின் டவுன்டவுன் பகுதியில் ரிரிசி ஸ்டீரிட் கார் தடம் புரண்டதில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

C2



### இஸ்ரேல் - ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வரும்

# அமெ. அதிபரின் திட்டத்துக்கு கனடாவின் பிரதமர் வரவேற்பு

**ஒன்ராரியோ, ஜூன் 02**

**இஸ்ரேல் - ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அமெரிக்க அதிபர் முன்வைத்த முன்மொழிவுக்கு கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒப்புதல் அளித்துள்ளார்.**

**இஸ்ரேல் - ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு மூன்று கட்ட ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் முன்வைத்திருந்தார்.**

இந்தப் பிரேரணை அமைதிக்கான பாதைக்குத் திரும்புவதற்கான ஒரு வாய்ப்பாகும் என ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

உடனடியான போர் நிறுத்தம், தடையில்லா மனிதாபிமான உதவிகள் வழங்கல், பணயக் கைதிகள் விடுதலை ஆகியவற்றை கனடா வலியுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய குடிவரவாளர்கள் மீது குற்றம் சுமத்தும் டக் ஃபோர்டின் கருத்து முட்டாள்தனமானது

### குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் விமரிசனம்

ஒன்ராரியோ, ஜூன் 02

புதிய குடிவரவாளர்களுக்கு எதிரான ஒன்ராரியோ முதல்வரின் கருத்து முட்டாள்தனமானது என குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

டொரன்டோவில் நிகழ்ந்த யூதப் பாடசாலை மீதான துப்பாக்கிப்பிரயோகத்தின் பின்னணியில் புதிய குடிவரவாளர்கள் உள்ளனர் என ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

யூத நிறுவனங்கள் மீதான சமீபத்திய தாக்குதல்களின் பின்னணியில் புலம்பெயர்ந்தவர்கள் இருப்பதாகத் தோன்றுவதாக டக் ஃபோர்ட் தெரிவித்த கருத்துக்கள் முட்டாள்தனமானவை என அமைச்சர் மார்க் மில்லர் விமர்சித்துள்ளார்.

இந்த வாரம் டொரன்டோ மற்றும் மொன்ரியல்



நகரங்களில் உள்ள யூதப் பாடசாலைகள் மீதான துப்பாக்கி பிரயோகங்களை அமைச்சர் வன்மையாகக் கண்டித்தார்.

ஒன்ராரியோ முதல்வரின் கருத்துக்காக எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவிப்பதுடன், அவர் மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றன.




# உறுதியுடன் நிற்க யூத சமூகம் உறுதி

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 02

கனடாவின் யூத சமூகத்தின் உறுப்பினர்கள் சனிக்கிழமையன்று சப்பாத் சேவைகளின் போது கவலை மற்றும் உறுதியை வெளிப்படுத்தினர். பாடசாலைகள் மற்றும் மத நிறுவ னங்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பிறகு, இது அதிகரித்து வரும் யூத விரோதப் போக்கு பற்றிய அச்சத்தை மேலும் தூண்டியுள்ளது.

வான்கூவரில், ஸ்காரா ஷ்டெக் ஜெப ஆலயக் கட்டிடத்தின் முன்கதவு வியாழன் இரவு தீப்பிடித்த சம்பவத்திற்கு பின்னர் அதன் முதல் சேவையை நடத்தியிருந்தது.

காலை ஆராதனைக்கு முன்னதாக, வழிபாட்டாளர்கள் தாக்குதலுக்கு திகைப்பையும், அதை எதிர்கொண்டு வலுவாக நிற்க வேண்டும் என்ற தங்கள் உறுதியான எண்ணத்தையும் வெளிப்படுத்தினர்.

வன்முறை மற்றும் மிரட்டல் மூலம் தன்னை வெளிப்படுத்துவது ஜனநாய கத்தை வீணடிக்கும் செயலாகும். 'இது அற்பமானது மற்றும் ஜனநா யகத்தின் ஆசீர்வாதத்தை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்கிறது.'

# LGBTQ2 உரிமைகளுக்கான ஆதரவு கனடாவில் குறைந்து வருகின்றதாம்

ஒன்ராரியோ, ஜூன் 02

பிரைட் மாதத்தை முன்னிட்டு, கனடாவில் LGBTQ2 உரிமைகளுக்கான ஆதரவு குறைந்து வருவதாக ஒரு புதிய கருத்துக்கணிப்பு கண்டறிந்துள்ளது.

Iposos கணக்கெடுப்பு 26 நாடுகளில் உள்ள பெரியவர்களிடம் குயர் சமூகத்திற்கான ஆதரவை அளவிடும் பல்வேறு அளவீடுகளில் வாக்களித்தது.

உரிமைகள் மற்றும் தெரிவுநிலைக்கான ஆதரவு 'விரைவான வீழ்ச்சிகளை' பதிவு செய்யத் தோன்றிய சில நாடுகளில் கனடாவும் ஒன்றாகும் என்று பொது விவகாரங்களின் இப்சோஸ் துணைத் தலைவர் சன்யம் சேத்தி கூறியுள்ளார்.

'கனேடியர்கள் தங்கள் கருத்துக்களை எவ்வளவு அப்பட்டமாக மாற்றிக் கொள்கிறார்கள் என்பது எனக்கு உண்மையில் தனித்து நின்றது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

'இந்த ஆதரவு அம்சங்களில் சிலவற்றில், எங்களிடம் உள்ள 26 நாடுகளிலும் கனடாவின் வீழ்ச்சிகள் மிக அதிகமாக உள்ளன' என அவர் தெரிவித்துள்ளார்.

பதிலளித்தவர்களில் 49 சதவீதத்தினர் மக்கள் தங்கள் பாலியல் நோக்குநிலை அல்லது பாலின அடையாளத்தைப் பற்றி வெளிப்படையாகக் கூறுவதை ஒப்புக்கொண்டாலும், அது கனடாவை இன்னும் 10 நாடுகளின் கீழ் 10 இடங்களில் வைத்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கார் தடம்...

நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ரிரிசி ஸ்டீரிட் கார் ஒன்று தடம் புரண்டது.

காயமடைந்த மூவரில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் ரிரிசி ஸ்டீரிட் காரில் பயணித்த இருவரும், மற்றைய வாகனத்தின் சாரதியும் காயமடைந்துள்ளனர்.






# வான்கூவரில் பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டத்தில்14 பேர் கைது!

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 02

வெள்ளிக்கிழமை வான்கூவரில் ரயில் பாதைகளை மறித்து பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய போராட்டத்தில் 14 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வான்கூவரின் கிழக்குப் பகுதியில் கனேடிய தேசிய ரயில் பாதைகளைத் தடுத்து நிறுத்தும் எதிர்ப்பாளர்கள், நகர்த்துவதற்கான பல கோரிக்கைகளை நிராகரித்ததாகவும், சிலர் அதிகாரிகளுடன் 'பகைமை கொண்டனர் எனவும்' பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் அழைக்கப்பட்ட மூன்று மணி நேரத்திற்கும் மேலாக, பிற்பகல் 2:30 மணியளவில் 14 போராட்டக்காரர்கள் தடை விளைவித்தமை மற்றும் இடையூறுகளுக்காக கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

'முக்கிய உள்கட்டமைப்பைத் தடுக்கும் சட்டவிரோதப் போராட்டங்கள் மக்களின் பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்துகின்றன' என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

# கனடாத் தேர்தல்களில் தலையிடாதீர்! சீனாவிடம் கனடா எடுத்துரைத்ததாம்

ஒன்ராரியோ, ஜூன் 02

சிங்கப்பூரில் நடைபெற்ற நாடுகளின் பாதுகாப்புத் தலைவர்களின் சந்திப்பின் போது தனது தேர்தலில் தலையிடுவதற்கு எதிராக சீனாவை எச்சரித்ததாக அதன் கனடாவின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'எங்கள் தேர்தல்கள் உட்பட எங்கள் நிறுவனங்களில் தலையிடுவது உட்பட அனைத்து வெளிப்பாடுகளிலும் வெளிநாட்டு தலையீடு குறித்த கவலையை நான் எழுப்பினேன்' என்று பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேர் ராய்ட்டர்ஸிடம் கூறினார்.

கனடாவின் உள்நாட்டு உளவு நிறுவனம் ஏப்ரலில், தேர்தல் தலையீடு தொடர்பான உத்தியோகபூர்வ விசாரணையின் ஒரு பகுதியாக கடந்த இரண்டு தேர்தல்களில் சீனா தலையிட்டதாகக் கூறியது.

எனினும், பெய்ஜிங் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது.



# இலவச குளிரூட்டிகளை வழங்கும் திட்டத்துக்கு 3 மடங்கு நிதியுதவி

## பிரிட்டிஷ் கொலம்பியா அரசு அறிவிப்பு

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன்02

பிரிட்டிஷ் கொலம்பியா அரசாங்கம் ஜூன் மாதத்தில் வெப்பமான மற்றும் வறண்ட கால நிலையை எதிர்பார்த்து குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இலவச குளிரூட்டிகளை வழங் கும் அதன் திட்டத்திற்கு மூன்று மடங்கு நிதியுதவி செய்வதாக கூறுகிறது.

ஜோசி ஆஸ்போர்ன், பிரிட்டிஷ் கொலம் பியாவின் எரிசக்தி அமைச்சர், கோடைகால வெப்பத் தயார்நிலை பற்றிய புதுப்பிப்பின் போது, திட்டத்திற்கு கூடுதலாக 20 மில்லியன் டொலர் களை அறிவித்துள்ளார்.

'அதீத வெப்பத்துடன் போராடும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள பலருக்கு தங்கள் வீடு களை குளிர்விக்க வரும்போது பெரும்பாலும் வரையறுக்கப்பட்ட விருப்பங்கள் உள்ளன, குறிப் பாக குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அல்லது மருத்துவ ரீதியாக பாதிக்கப்படக்கூடிய வர்களுக்கு' என்று ஆஸ்போர்ன் தெரிவித்துள்ளார்.

மாகாணம் கூட்டாக பிரிட்டிஷ் கொலம்பியா ஹைட்ரோ கடந்த ஆண்டு இலவச போர்ட்டபிள் ஏர் கண்டிஷனர்திட்டத்தைஅறிமுகப்படுத்தியது.









# இந்திய மாணவர்களை ஏமாற்றி கனடாவுக்கு அனுப்பிய நபருக்குத் தண்டனை போதாதாம்

## பாதிக்கப்பட்ட மாணவர்கள் தரப்பில் விசனம்

நூற்றுக்கணக்கான இந்திய மாணவர்களுக்கு போலி அனுமதி ஒஃபர் கடிதங்களைக் கொடுத்து கனடாவுக்கு அனுப்பிய நபர் கைது செய்யப்பட்ட நிலையில், அவருக்கு வெறும் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை மட்டுமே வழங்கப்பட்டுள்ளதால், அவரால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்தியாவின் ஜலந்தரில் அமைந்துள்ள, ப்ரிஜேஷ் மிஸ்ரா (வயது 37) என்பவர் நடத்தும் Education Migration Services என்ற அமைப்பில், ஆளுக்கு 16 இலட்ச ரூபாவுக்கும்(இந்தியப் பணத்தில்) அதிகமான தொகையை செலுத்தி கனடாவில் கல்வி கற்பதற்காக, கல்வி விசாவுக்கு விண்ணப்பித்தார்கள் 700 மாணவர்கள்.

அவர்கள் கனடாவில் படிப்பை முடித்து, நிரந்தரக் குடியிருப்பு அனுமதி கோரி விண்ணப்பிக்கும்போது அவர்களுடைய அனுமதி ஒஃபர் கடிதங்கள் (admission offer letters) போலியானவை என தெரியவந்ததையடுத்து, அவர்கள் நாடுகடத்தப்படும் நிலை உருவாயிற்று.

இந்நிலையில், சுற்றுலா விசாவில் கனடா வந்த மிஸ்ராவை 2023ஆம் ஆண்டு, ஜூன் மாதம் கனேடிய பொலிசார் கைது செய்தார்கள். அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மிஸ்ராவுக்கு வெறும் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை மட்டுமே விதிக்கப்பட்டுள்ளதால், அவரால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், தாங்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்கள்.

மிஸ்ராவால் ஏமாற்றப்பட்டவர்களில் பலர் இந்தியாவுக்கு நாடுகடத்தப்படும் நிலை உருவானது. ஆனால், இப்போது அவர்களில் சிலருக்கு நிரந்தரக் குடியிருப்பு அனுமதிகளும், நீண்ட கால பணி அனுமதிகளும் வழங்கப்படும் வகையில் நிலைமை மாறியிருந்தாலும், தங்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்திய மிஸ்ராவுக்கு வழங்கப்பட்ட தண்டனை மிகவும் குறைவு என அவர்கள் கருதுகிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரான ரவீந்திரப் பிரீத் சிங் (வயது28) என்னும் இந்திய மாணவர் கூறும்போது, மிஸ்ராவால் என் வாழ்வில் பல ஆண்டுகள் வீணாகிப்போயின, மன அழுத்தத்தையும் பணப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டேன், அவருக்கு தண்டனை கிடைத்ததில் எனக்கு மகிழ்ச்சி, ஆனால், அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை போதாது என்று கூறியுள்ளார்.


இந்த இந்திய மாணவர்களுக்காக வழக்காடிய ரொரன்றோவை மையமாகக் கொண்ட புலம்பெயர்தல் சட்டத்தரணியான சுமிட் சென் என்பவர் கூறும்போது, மிஸ்ராவுக்கு குறைந்த பட்சம் ஒன்பது ஆண்டுகள் சிறைத்தண்டனையாவது விதிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.


# கனடாவிலிருந்தும் புலம்பெயர்வு இப்போது அதிகரித்து வருகிறதாம்

பத்து ஆண்டுகளில் இல்லாத அளவில், கனடாவிலிருந்து வெளியேறி பிற நாடுகளுக்குச் செல்லும் மக்கள் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

சமீப காலமாகவே பல்வேறு காரணங்களுக்காக கனடாவை விட்டு வெளியேறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை பற்றிய செய்திகள் தொடர்ந்து வெளியாகிவருகின்றன.

அவ்வகையில், 2022இல் மட்டும் 126,340 பேர் கனடாவை விட்டு வெளியேறி அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார்கள். 10 ஆண்டுகளுக்கு முந்தைய நிலைமையை ஒப்பிடும்போது, இந்த எண்ணிக்கை, 70 சதவிகிதம் அதிகமாகும். அவர்களில், 53,311 பேர் கனடாவில் பிறந்தவர்கள். 42,595 பேர் அமெரிக்காவிலிருந்து கனடாவில் வாழ வந்தவர்கள். 30,434 பேர் கனடாவுக்கு புலம்பெயர்ந்த வெளிநாட்டவர்கள். தற்போது அவர்கள் அமெரிக்காவில் குடியேற முடிவு




செய்துள்ளார்கள்.

கனடாவிலிருந்து வெளியேற பல்வேறு காரணங்கள் உள்ளன. சில விடயங்களில் அமெரிக்கா கனடாவை விட சிறந்ததாக கருதப்பட்டாலும், அங்கும் அதிக செலவு பிடிக்கும் விடயங்கள் உள்ளன.

ஆனால், நீங்கள் ஏன் கனடாவை விட்டு வெளியேற விரும்புகிறீர்கள் என கேட்டால், பலரும் கூறும் காரணம், எங்களுக்கு ட்ரூடோவின் ஆட்சி பிடிக்கவில்லை என்பதுதான் வேடிக்கையாக உள்ளது என்கிறார் கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு புலம்பெயர மக்களுக்கு உதவிவரும் சட்டத்தரணி ஒருவர்.